**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 105/2021**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | புருஷோத்தமன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | பெருமாள் மேஸ்திரி | RELIGION | இந்து |
| AGE | 55 | OCCUPATION | |
| VILLAGE | மேட்டூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 22.09.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

1. எந்த தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன் என்றால் 02.07.1997 தேதியிட்ட ஆவண எண்.3063/1997 தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் யார் எழுதி கொடுத்தது என்றால் எங்களது சித்தப்பா கிருஷ்ணன் எங்கள் பெயரில் எழுதிக்கொடுத்தது. எந்த சர்வே நெம்பர் சம்மந்தப்பட்டது என்றால் சர்வேஎண்.156/1டி –ல் 10 செண்ட். மேற்படி ஆவண எண்.3063/1997 தேதியிட்ட அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சர்வே எண்.156–ல் உள்ள 10 செண்ட் இடத்தில் பிரதிவாதி பிரச்சினை செய்தார். சர்வே எண்.156–ல் உட்பிரிவுகள் சொல்லமுடியுமா என்றால் உட்பிரிவு இன்னும் செய்யவில்லை. நாங்கள் எல்லாம் சேர்ந்து ஒன்றாக இருந்ததால் உட்பிரிவு செய்யவில்லை. நாங்களும் எனது சித்தப்பா கிருஷ்ண மேஸ்திரி குடும்பத்தாரும் ஒன்றாக இருந்ததால் உட்பிரிவு செய்யவில்லை என சொல்கிறேன் என்றால் சரிதான்.

3. கிருஷ்ண மேஸ்திரி மகன் கோவிந்தராஜ் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் எதற்காக எழுதப்பட்டது என்றால் அவர்கள் பட்டா வாங்கியபோது 10 செண்ட் நிலம் கூடுதலாக அவர்களுக்கு போய்விட்டது அதனால் 10 செண்டுக்காக கிரயபத்திரம் எழுதிகொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் 26.05.1999 அன்று நாங்களும், கிருஷ்ணனும் பரிவர்த்தனை செய்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனையில் நாங்கள் கிருஷ்ணனுக்கு 10 செண்ட் கொடுத்து அவரும் எங்களுக்கு 10 செண்ட் கொடுத்தார் என்றால் சரியல்ல, நாங்கள் கொடுக்கவில்லை, அவர் மட்டும் தான் 10 செண்ட் எங்களுக்கு கொடுத்தார். மேற்படி 01.01.1975 முதல் 21.09.2025 வரையான

வில்லங்க சான்று ONLINE நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 10 செண்ட் நிலத்தில் தான் பிரதிவாதி தகராறு செய்வதாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

4. ஆவண எண்.2544/1999 ஆவணத்தை குறிப்பிட்டு எனது தாவாவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் மேற்படி 10 செண்ட் குறித்தும், ஆவண எண்.2544/1999 குறித்தும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆவண எண்.2544/1999 தானா என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மேற்படி ஆவணத்தில் ஏ அட்டவணை சொத்து எங்களுக்கும், பி அட்டவணை சொத்து கிருஷ்ணனுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான், எங்களுக்கு கொடுத்த ஏ அட்டவணை சொத்தை ரத்து செய்துவிட்டு பி அட்டவணை சொத்தை எங்களுக்கு கொடுத்தார்கள். மேற்படி ஆவணத்தில் பார்வையிடும் பட்சத்தில் ஏ அட்டவணை சொத்து கிருஷ்ணனுக்கும், பி அட்டவணை சொத்து எங்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் ஆவணத்தில் உள்ளவாறு ஒதுக்கப்பட்டது. அதில் எ அட்டவணை சொத்து கிருஷ்ணன் சுவாதீனத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும், பி அட்டவணை சொத்து ராஜேந்திரன், பால்ராஜ், புருஷோத்தமன் மற்றும் சிட்டிபாபு ஆகியோர்களது சுவாதீனத்தில் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி பி.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை. அந்த ஆவணத்தில் ஏ அட்டவணை சொத்தை கிருஷ்ணனும் அவரது வாரிசுகளும் செக்குபந்தி அடிப்படையில் அனுபவிக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆட்சேபனை இல்லை. என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றில் குறிப்பிட்டுள்ள 31.07.1979 அன்று சர்வே எண்.155/2–ல் 2 செண்ட் நிலத்தை கிருஷ்ணமேஸ்திரி வரதராஜ மேஸ்திரியிடம் இருந்து வாங்கினார் என்றால் சரிதான், அந்த 2 செண்ட் நிலம் சின்னகுழந்தை நிலத்தில் உள்ளது எங்கள் நிலத்தில் இல்லை.

7. அந்த கிரயம் வாங்கிய சொத்தின் செக்குபந்தி சித்தூர் ரோட்டுக்கு கிழக்கு, சின்னகுழந்தை கவுண்டர் நிலத்திற்கு வடக்கு, பெருமாள் மேஸ்திரி நிலத்திற்கு தெற்கு, கிருஷ்ணமேஸ்திரி நிலத்திற்கு மேற்கு என்றால் சரிதான். அந்த சொத்தை பிரதிவாதி அனுபவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். தாவாவை எவ்வளவு

அளவிற்காக போட்டுள்ளேன் என்றால் 155–ல் 42 செண்ட், 156–ல் 1 ஏக்கரா 38 செண்ட்டுக்காக வழக்கு போட்டுள்ளேன். சர்வே எண்.155 மற்றும் 156 உட்பிரிவு ஆகவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் நிலத்தில் எனது சித்தப்பா கிருஷ்ணனுக்கு நிலம் கூட்டாக உள்ளதா என்றால் 155–ல் கூட்டு இல்லை, 156–ல் கூட்டாக நிலம் உள்ளது. மேற்படி விவரத்தை தாவாவில் சொல்லியுள்ளேன்.

8. தாவாவில் சர்வே எண்.155 மற்றும் 156–ல் மொத்தமாக குறிப்பிட்டுள்ளீர்களா என்றாலும் அல்லது உட்பிரிவோடு சொல்லியுள்ளேனா என்றால் உட்பிரிவோடு சொல்லவில்லை 155, 156 என மொத்தமாக சொல்லியுள்ளேன். நான் ஆவணங்களையும் உட்பிரிவோடு போடவில்லை என்றாலும் 155 மற்றும் 156–க்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பிரச்சனை செய்ததாக சொல்லும் 10 செண்ட்டிற்கு செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால்என்ன எழுதியுள்ளார் என்று பார்த்தால் தான் தெரியும். நான் சொல்வதுபோல் பிரதிவாதி எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் அதனால் தான் என்னால் செக்குபந்தி சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.

9. 1999 –ல் ஏற்பட்ட பரிவர்த்தனை தொடர்பாக தான் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது என்றாலும் வேறு பிரச்சினை இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. ஒரு ஆவணத்தை எழுதி அது நடைமுறைக்கு வந்தபிறகு அதை மறுத்து சாட்சி சொல்ல முடியாது என்றால் சொல்லமுடியாது. அதனால் அந்த பரிவர்த்தனை தொடர்பாக பிரச்சினை செய்வதாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.